DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**SC. No. 51/2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW23 |
| Name | : | டாக்டர். கே.எம்.பாலாஜி |
| Father's / Husband's Name | : | முருகப்பன் |
| Age | : | 37 |
| Religion | : | Hindu |
| Calling | : | |
| Caste | : | BC |
| Village | : | R.K.PET |
| Date | : | 03.08.2022 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிகிறேன். கடந்த 25.10.2015ம் தேதி வாலாஜா அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது காலை 10.41 மணிக்கு வாலாஜா காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்துடன் காவலர் தீனதயாளன் என்பவர் இறந்துபோன சிவக்குமார் என்பவரின் பிரேதத்தை அடையாளம் காட்டியதன் பேரில் நான் உடற்கூராய்வு செய்தேன். நான் காலை 10.50 மணிக்கு பிரேத கூராய்வு தொடங்கினேன். நான் பிரேதத்தை பரிசோதனை செய்தபோது பிண விரைப்பு தன்மை நான்கு விளிம்புகளிலும் காணப்பட்டது. பிரேதமானது நன்கு திடகாத்திரமான ஆண ் பிரேதமானது மல்லாந்த நிலையில் இருந்தது. பிரேத்தில் காணப்பட்ட வெளிப்புற காயங்கள் =

பிரேதத்தின் பின்பக்க தலையின் நடுப்பகுதியில் வெட்டுக்காயம் 10 x 3 x 2 செமீ அளவில் காணப்பட்டது.

ரத்தக்கட்டு 2 பக்க மூக்கின் துவாரங்களிலும் இரண்டு பக்க காதுகளிலும் காணப்பட்டன.

வலது நுனிக்காலில் 5 x 2 x 3 செமீ அளவில் வெட்டுக்காயத்துடன் அந்த பகுதியில் கல்கேனிம் எலும்பு உடைந்திருந்தது.

வலது கை நடுவிரலில் வெட்டுக்காயம் 2 x 1 x 1 செமீ அளவில் காணப்பட்டது.

இடுப்பு மற்றும் பிட்டம் பகுதியில் 30 x15 செமீ அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டன.

வலது கையில் சிராய்ப்பு காயம், இடது கையில் சிராய்ப்பு காயம் காணப்பட்டன.

வலது முன்னங்கையில் 5 x 4 செமீ அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டன.

வலது தோள்பட்டையில் 4x3 செமீ அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டன. இடது கால் பெருவிரலில் 3x2 செமீ அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டன.

பிரேதத்தை உட்புறத்தை பரிசோதனை செய்ததில் நாவடி எலும்பு இயல்பான நிலையில் இருந்தது. நெஞ்சுக்கூட்டில் இரண்டு நுரையீரல்களிலும் ரத்த ஓட்டம் இல்லாமல் இருந்தது. இதயம் வீங்கி இருந்தது. அதில் ரத்தக்கட்டுகள் இருந்தன. இரைப்பை காலியாகவும், ரத்தஓட்டம் இல்லாமல் இருந்தது. கல்லீரல், மண்ணீரல், இரண்டு சிறுநீரகங்கள் ரத்த ஓட்டம் இல்லாமல் இருந்தது. சிறுநீர்ப்பை காலியாக இருந்தது. கபால எலும்புகள் இயல்பாக இருந்தன. மூளையின் பின்புறபகுதியில் ரத்தக்கட்டுகள் காணப்பட்டன. எனவே பிரேதமானது ரத்த ஓட்டம் இல்லாமலும், மூளையில் ஏற்பட்ட காயத்தினாலும் பிரேத பரிசோதனைக்கு முன்பு 16.00 மணியிலிருந்து 20.00 மணி நேரத்திற்கு முன்பாக கூர்மையான மற்றும் கனமாக பொருட்களினால் அடிப்பட்டு இறந்திருக்கலாம் என்று பிரேத கூராய்வு அறிக்கை வழங்கினேன். எனக்கு காவல் ஆய்வாளர் பிணக்கூராய்வு செய்வதற்காக கொடுத்த வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.12**. அந்த

பிரேத கூராய்வு அறிக்கை **அ.சா.ஆ.13** ஆகும். மேற்படி இறந்துபோன நபருக்கு ஏற்பட்ட காயங்கள் காரிலிருந்து ஒரு நபரை தள்ளிவிட்டு கடினமான பரப்பின் மீது விழும்போது ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் குறிப்பிட்டுள்ள காயங்கள் ஒரு நபர் இருச்சகர வாகனத்தில் சென்றுகொண்டிருக்கும் போது தவறி ரோட்டில் விழும்போது ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH